## திராவிட இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு - தன்னுடைய கருத்துகளை

# மக்களிடையே எளிய வகையில் கொண்டு சேர்த்தவர், பொம்மலாட்டக் கலைஞர் மு.கலைவாணன்!

### பொம்மலாட்டக் கலைஞர் – திராவிட இயக்கச் செயற்பாட்டாளர் மு.கலைவாணன் நினைவு போற்றும் நிகழ்வில் –

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**சென்னை, ஜூலை 7-**

**சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற, பொம்மலாட்டக் கலைஞரும் திராவிட இயக்க செயற்பாட்டாளருமான மு. கலைவாணன் அவர்கள் நினைவு போற்றும் நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ஓவியர் டிராட்ஸ்கி மருது உள்ளிட்டோர் பங்கேற்றனர்.**

**இந்நிகழ்வில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசுகையில், “பெரியாருடைய கருத்துகளைப் பற்றியெல்லாம் சிலபேர் பேசுகிறார்கள். எனக்குப் பெரியாருடைய கருத்துகளில் உடன்பாடு இருக்கிறது, ஆனால் சில விஷயங்களில் இல்லை என்று புதுவிதமாக பேசுகிறார்கள்” என்று குறிப்பிட்டார்.**

இந்நிகழ்வில் அவர் பேசியதாவது:-


இந்த சமூகத்தில் எந்த மூடநம்பிக்கைகளை தொடர்ந்து திணித்துக் கொண்டிருந்தார்களோ, அதையெல்லாம் தன்னுடைய கலைவடிவத்தின் வாயிலாக மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவை கொண்டு சேர்த்தவர், கலைவாணன் அவர்கள். இது இரண்டு பெரிய சவால்களோடு இருக்கக்கூடிய விஷயமாகும். ஒன்று, இந்த சமூகம் ஏற்றுக்கொள்ளாத கருத்துகளைப் பேசக்கூடிய ஒரு வழியை தனது பாதையை அவர் தேர்ந்தெடுக்கிறார். இன்னொன்று, கொஞ்சம் கொஞ்சமாக அறுகி வந்து கொண்டிருக்கக்கூடிய மண் சார்ந்த கலைவடிவங்களிலே இன்னும் அதிகமாக மக்களுக்கு இடையே இல்லாத பொம்மலாட்ட கலையை தேர்ந்தெடுக்கிறார்.

இந்த இரண்டு விசயங்களையும் வெற்றிகரமாக கொண்டு சேர்த்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் நேரத்தில்கூட தலைவர் கலைஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பல இடங்களிலே அவருடைய இந்த பொம்மலாட்டத்தின் வழியான பிரச்சாரங்கள் நடைபெற்றிருக்கிறது.

அந்த அளவிற்கு இந்த இயக்கத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு, தன்னுடைய கருத்துகளை மக்களிடையே எளிய வகையில் கொண்டு சேர்த்தவர். பெண் விடுதலையில் இருந்து தொடர்ந்து இந்த சமூகம் முன்வைத்துக் கொண்டிருக்கக் கூடிய பல்வேறு விஷயங்களை கேள்வி கேட்கக்கூடிய ஒரு வடிவத்தை, ஒரு வழியை அவர் தேர்ந்தெடுத்து அதில் எந்தக் காலக்கட்டத்திலும் எந்த இடத்திலும் எந்தவித சமரசமும் இல்லாமல் எந்த இடத்திலுமே விட்டுக்கொடுக்காமல் தொடர்ந்து பயணித்தார்.





இன்றைக்கு நிறைய பேர் கேள்வி கேட்கிறார்கள், பெரியாருடைய கருத்துகளைப் பற்றியெல்லாம் சிலபேர் பேசுகிறார்கள். எனக்குப் பெரியாருடைய கருத்துகளில் உடன்பாடு இருக்கிறது, ஆனால் சில விஷயங்களில் இல்லை என்று புதுவிதமாக பேசுகிறார்கள்.

**கடவுளை ஏன் எதிர்க்க வேண்டும்?**

கடவுளை ஏன் எதிர்க்க வேண்டும் என்று பெரியாரே சொல்லியிருக்கிறார். பெரியாருக்கும், கடவுளுக்கும் “வாய்க்கா வரப்பு” தகராறு இல்லை. நான் ஏன் எதிர்க்கிறேன் என்று கேட்டபொழுது, அவர் சொன்ன பதில் நான் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் ஊற்றுக் கண்ணாக இருந்து, இந்த சமூகத்திலே ஏன் இந்த விஷயங்கள் எல்லாம் முன்வைக்கப்படுகிறது என சிந்திக்க வைக்கிறது. ஜாதி ஏன் முன்வைக்கப் படுகிறது? ஏற்றத்தாழ்வு ஒருவரது பிறப்பின் வாயிலாக இந்த சமூகத்திலே எப்படி முன்வைக்கப்படுகிறது? ஆண் பெண் என்ற வித்தியாசங்களை எல்லாம் இந்த சமூகம் ஏன் திரும்ப திரும்ப சொல்லுகிறது? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதிலாக அமைந்தது மதமும் கடவுளும்தான்.

அதை உடைத்தவர், கேள்வி கேட்டவர், தகர்த்தவர் தந்தை பெரியார். அதனால் இந்த சமூகத்திலே மாறுதல்களை கொண்டுவர வேண்டும், சுயமரியாதை கருத்துகளைக் கொண்டுவர வேண்டும், இந்த சமூகத்திலே எல்லாரும் சமம் என்று உண்மையிலேயே நம்பக்கூடியவர்கள் எதையும் கேள்வி கேட்கத் தயங்காதவர்கள் மட்டும்தான் இந்த சமூகத்திலே உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர முடியும். அப்படிப்பட்ட மாற்றத்திற்காக உழைத்தவர்தான் கலைவாணன். அவருடைய நினைவுகளை நாம் இந்த மேடையிலே போற்றிக் கொண்டிருக்கிறோம்.

அவரோடு இணைந்து சென்னை சங்கமத்திலேயும் பல சந்தர்ப்பங்களிலும், பல இடங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. பொதுவாக இந்த மாதிரி கலை நிகழ்ச்சிகளுக்கு, அதுவும் சிந்திக்கக் கூடிய கருத்துகளைச் சொல்லக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு வெகு சுலபமாக மக்கள் வராத காலகட்டத்தில் கூட அவருடைய கருத்துகளை கேட்பதற்காக பல்வேறு மக்கள் தேடி வருவார்கள். குறிப்பாக சென்னை சங்கமத்தில் நாங்கள் நடத்தக் கூடிய அந்த நிகழ்வுகளை கேட்பதற்காக எந்த அளவிற்கு ஆர்வத்தோடு மக்கள் வந்தார்கள் என்பதை நாங்கள் பல நேரங்களிலே பார்த்திருக்கிறோம்.

**கலைப் பயணம்!**

அப்படிப்பட்ட ஒரு கலைஞரைப் போற்றக்கூடிய வகையில் அவருடைய மறைவிற்குப் பிறகு அவருடைய மகனோடு நான் பேசிய நேரத்தில், என்னுடைய தந்தை இல்லை. ஆனால் அவர் எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கக்கூடிய அவருடைய கருத்துகள், சிந்தனைகள், கலை இவற்றை நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம் என்று சொல்லக்கூடிய பிள்ளைகளைப் பெற்றிருக்கக்கூடிய அவருடைய நினைவுகளைப் போற்றுவோம். அவரது முற்போக்கு கருத்துகளை, கலையை நாம் தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த கலைப்பயணத்தில் அவர்களுக்கு எங்களால் முடிந்த அளவிற்கு எப்பொழுதும் உறுதுணையாக நிற்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசினார்.

---

### புதுச்சேரி மாநிலத்தில் சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு

## வங்கிகள் அளித்துள்ள கடன்கள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுக!

### புதுச்சேரி அரசை - தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, ஜூலை 7-

இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவை மதிக்காமல் செயல்படும் இந்தியன் வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், சர்பாசி சட்டத்தை வங்கி அதிகாரிகள் சட்டவிரோதமாக பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் சொத்துக்களை ஏலம் விட்டு கொள்ளை அடிப்பதைக் கண்டித்தும், சிறு, குறு தொழில்களை நசுக்கும் வங்கி நிர்வாகத்தை கண்டித்தும் அகில இந்திய வங்கி மற்றும் வங்கி சாரா வாடிக்கையாளர் நலன் மற்றும் பாதுகாப்பு நலச்சங்கம் சார்பில் புதுச்சேரி கொக்குப்பார்க் சந்திப்பில் இந்தியன் வங்கி மண்டல அலுவலகம் அருகில் நேற்று காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சங்க ஒருங்கிணைப்பாளர் நடராஜன் தலைமை வகித்தார். தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசுகையில், வங்கிகள் மக்களின் பணத்தைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட அமைப்புகளா, அல்லது மக்களிடம் பல்வேறு கட்டணங்களை வசூலித்து லாபம் ஈட்டும் நிறுவனங்களா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.




ஒரு சாதாரண மனிதர் வங்கியில் பணம் செலுத்தினாலும் கட்டணம், பணம் எடுத்தாலும் கட்டணம், குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாவிட்டாலும் கட்டணம், குறுஞ்செய்திக்கும் கட்டணம் என வாடிக்கையாளர்களின் மீது பல்வேறு பெயர்களில் சுமைகள் ஏற்றப்படுகின்றன. வங்கிகள் தங்களது கட்டண விவரங்களை வெளிப்படையாகவும் எளிதில் புரியும் வகையிலும் தெரிவிக்க வேண்டும்.

**அவமானப்படுத்தும் அணுகுமுறை!**

பெரிய நிறுவனங்களின் கடன்களை வசூலிப்பதில் காட்டப்படாத வேகம், சிறு வியாபாரி, நடுத்தர குடும்பம், வீடு கட்ட கடன் வாங்கியவர், வாகனக் கடன் பெற்றவர் ஆகியோரிடம் மட்டும் காட்டப்படுவது ஏன்? ஒரு தவணை தாமதமானாலே சாதாரண மக்களுக்கு தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள், அழுத்தம், அவமானப்படுத்தும் அணுகுமுறை போன்ற புகார்கள் எழுகின்றன. கடன் வசூல் நடவடிக்கைகள் சட்டத்திற்கும் மனித கண்ணியத்திற்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும்.

சர்ஃபாசி சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் போது, சிறு மற்றும் நடுத்தர கடனாளிகளின் வாழ்வாதாரம், தொழில் தொடர்ச்சி, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிய மறுசீரமைப்பு மற்றும் நியாயமான தீர்வு வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். சிறு தொழில்களைத் தொடங்குங்கள், இளைஞர்கள் தொழில்முனைவோராக மாறுங்கள் என்று அரசு கூறுகிறது. ஆனால் தொழிலில் ஒரு பின்னடைவு ஏற்பட்டவுடன் வங்கிகள் அவர்களை மீண்டும் எழ முடியாத நிலைக்குத் தள்ளினால், புதிய தொழில் முனைவோர் எப்படி உருவாக முடியும்? முத்ரா, ஸ்டார்ட்-அப் போன்ற திட்டங்கள் விளம்பரத்திற்கான வார்த்தைகளாக மட்டும் இருக்கக் கூடாது. சிறு தொழில்களுக்கு எளிய கடன், நியாயமான வட்டி, மறுசீரமைப்பு வாய்ப்பு மற்றும் தொழில் தோல்வியடைந்தால் மீண்டு வருவதற்கான பாதுகாப்பு ஆகியவை தேவை.

**வங்கி தொடர்பான அறிவிப்புகள் தமிழ்மொழியில் காட்சிப்படுத்த வேண்டும்!**

வங்கி வாடிக்கையாளர்களின் புகார்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தீர்க்கப்பட வேண்டும். வங்கிகள் மீது புகார் அளிக்கும் பொதுமக்கள் அலைக்கழிக்கப்படக் கூடாது. புகார் பதிவு செய்தவுடன் கண்காணிப்பு எண், தீர்வுக்கான காலக்கெடு, மேல்முறையீட்டு வழிமுறை ஆகியவை தெளிவாக வழங்கப்பட வேண்டும். வங்கி வாடிக்கையாளர்களின் உரிமைகள் தொடர்பான அறிவிப்புகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் அனைத்து வங்கிக் கிளைகளிலும் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

புதுச்சேரியில் கடந்த ஆண்டு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் புதுச்சேரியில் சிறு, குறு, நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக பல ஆயிரம் கோடி கடன் அளித்திருப்பதாகவும், அதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகி இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதன்படி, புதுச்சேரியில் உள்ள வங்கிகள் மூலம் எவ்வளவு சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்தும், முத்ரா, ஸ்டார்ட்-அப் திட்டங்களில் எவ்வளவு பேருக்கு வங்கி கடனளித்திருக்கிது என்பது குறித்தும், ஏழை, எளிய மக்கள் சிறு கடன் பெற்றவர் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒன்றை புதுச்சேரி அரசு வெளியிட வேண்டும்.

**வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு முக்கியம்!**

வங்கிகள் மக்களுக்காக இருக்க வேண்டும். மக்கள் வங்கிகளுக்காக வாழ வேண்டிய நிலை ஏற்படக் கூடாது. சேமிப்பாளரின் பணமும் பாதுகாக்கப்பட வேண்டும்; கடன் வாங்கியவரின் கண்ணியமும் பாதுகாக்கப்பட வேண்டும். சட்டம் வங்கிகளுக்கு மட்டும் கவசமாக இருக்கக் கூடாது. சாதாரண மக்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வங்கி வாடிக்கையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் தி.மு.க. மக்கள் பக்கம் உறுதியாக நிற்கும்.

இவ்வாறு பேசினார்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இளம்பரிதி, தொகுதி செயலாளர்கள் நடராஜன், வடிவேல், தியாகராஜன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் மதிமாறன், நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமரன், மாநில துணை அமைப்பாளர்கள் சிவதாஸ், சிவா, உருளையன்பேட்டை தொகுதி பொருளாளர் சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## இல்லாத மருத்துவமனைக்கு 87 பேர் பணி நியமனம்!

இந்தூர், ஜூலை 6–

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்த நிலையில், அதன் கட்டுமானப்பணிகள் இதுவரை முடியவில்லை. இதேபோல், மத்திய பிரதேசம் இந்தூரில் 100 படுக்கை கொண்ட நவீன அரசு மருத்துவமனை கட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை ஒரு எந்த கட்டுமானமும் நடைபெறவில்லை. இருப்பினும், அரசு ஆவணங்களில் அந்த மருத்துவமனை செயல்படுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. மேலும், இல்லாத மருத்துவமனைக்கு, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என மொத்தம் 87 பேருக்கு பணிநியமனங்கள் வழங்கப்பட்டது அம்பலமாகியுள்ளது.

மருத்துவமனை செயல்பாட்டில் இல்லாத நிலையில், அந்த 87 பேரும் படிப்படியாக வேறு அரசு மருத்துவமனைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த மோசடி விவகாரம் மத்திய பிரதேசத்தில் தற்போது பூதாகரமாக வெடித்துள்ளது.

---


## இது உண்மையா குமாரு?

